## இந்து கலாசார நிதியம் - 2016

இந்து கலாசார நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு, பெறுவனவுகள் கொடுப்பனவுக் கணக்கு, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1985 இன் 31 ஆம் இலக்க இந்து கலாசார நிதியத்தின் 10(4) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேலே கூறிய நிதிக்கூற்றுக்கள் மீது எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக் கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை, 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இந்து கலாசார நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் மற்றும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம், நிதியத்தினால் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது அரசாங்க மானியங்கள் மற்றும் நிதியத்திற்கு கிடைக்கின்ற நன்கொடைகளை கணக்கீடு செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

2006 திசெம்பர் 22 திகதிய பீஎப்/423 ஆம் இலக்கம் கொண்ட அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 4.1(இ) பந்தியின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பாதீடு ஒன்று இன்றி குறிப்பிட்ட நிதியாண்டில் செலவுகள் ஏதும் மேற்கொள்ளப்படக் கூடாதெனினும், 2016 ஆண்டின் போது கோயில்களுக்கு நிதி உதவிகள் வழங்குதல், இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு சீருடைகள் கொள்வனவு செய்தல், இந்து மத விழாச் செலவுகள் மற்றும் அறநெறிப் புத்தகங்கள் கொள்வனவு செய்தல் போன்ற விவகாரங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட பாதீடு ஒன்று இன்றி ரூபா 5,166,716 தொகையான செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 1,428,489 மிகையொன்றாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 786,656 தொகையாக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 641,833 முன்னேற்றமொன்று காணப்பட்டது. முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 334,545 இனால் அதிகரித்தல் மற்றும் காணிக்கை பணம் சேகரிக்கும் செயற்திட்டத்தின் தேறிய வருமானம் என ரூபா 709,019 தொகை கிடைத்திருந்தமை மேலே கூறிய முன்னேற்றத்திற்கு முக்கிய காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

இந்து காலாசார நிதிய அதிகாரச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியத்தின் முக்கிய நோக்கம் மற்றும் குறிக்கோள் என இந்துக்களின் வழிபாட்டுத் தலங்களை அபிவிருத்தி செய்தல், இந்து மதத்தை மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்கான தேவையான

நடவடிக்கைகள் எடுத்தல் மற்றும் இந்து மதம் தொடர்பாக ஆய்வு விடயங்கள், வெளியீடுகளை வெளியிடுதல் மற்றும் மொழிபெயர்ப்பு விடயங்களுக்காக நிதி மற்றும் ஏனைய உதவிகள் வழங்குதல் என்பவற்றைக் காட்டியிருந்த போதிலும் அக் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள் என்பவற்றை நிறைவேற்றுவதற்காக நிதியத்தினால் போதியளவான செயற்பாடுகள் திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிக்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

இந்து கலாசார நிதியத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி இந்து மத செயற்பாடுகளை மேம்படுத்தல் மற்றும் இந்து அறநெறி பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல் ஆகிய 2 பிரதான நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் 12 தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந்து மக்களுக்காக சமய புத்தகங்களும், அறநெறி பாடசாலை பிள்ளைகளுக்கு பயிற்சிப் புத்தகங்கள் மற்றும் துணை நூல்களை கொள்வனவு செய்து வினியோகிப்பதற்கு திட்டமிட்டு மீளாய்வாண்டின் போது புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,408,550 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அப் புத்தகங்களில் ரூபா 772,417 பெறுமதியான புத்தகங்கள் விநியோகிக்கப்படாத காரணத்தினால் எதிர்ப்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது நிதியத்தின் பிரதான வருமான வழியாக இருந்த காணிக்கைப் பணம் சேகரிக்கும் செயற்திட்டம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியிருக்கவில்லை.

(இ) அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு சீருடை வினியோகிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,268,840 தொகை செலவிடப்பட்டு 1200 சேலைகள் கொள்வனவு செய்திருந்த போதிலும் 2017 ஆண்டு மே மாதம் அளவில் 1148 சேலைகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | இருப்புக் கட்டுப்பாடு | நிதியத்தினால் கொள்வனவு செய்யப்படும் பண்டங்களை ஆவணப்படுத்துதல் மற்றும் அப் பண்டங்களை வினியோகிக்கும் போது நலன் பெறுவோர் மீதான அறிக்கைகள் வைத்திருக்காமை. |
| (ஆ) | திட்டமிடல் | செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது எதிர்ப்பார்த்த அனைத்து வருமானங்கள் மற்றும் செயற்பாடுகள் உட்படுத்தியிருக்காமை மற்றும் தேவையான திருத்தங்கள் செய்யாமை. |